# வரலாற்றின் இயேசு விசுவாசத்தின் இஎசுதானா? – நிகழ்ச்சி 6

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** இன்றைக்கு வரலாற்று நாயகர் இயேசுவை குறித்ததான செய்திதான் பெரும்பாலும் பரவலாக பேசப்பட்டு வருகிற செய்தியாக இருக்கிறது பல தேசிய பத்திரிக்கைகளின் கவனத்தை ஈர்த்துவருகிறது, குறிப்பாக டைம், நியூஸ்வீக்,மற்றும் US நியூஸ் மற்றும் வேல்ட் ரிபோர்ட். மேலும், இயேசு செமினாரின் அறிக்கைகளுக்கு ஊடகங்கள் அளவிற்கு அதிகமான இடமளித்து பெரிது படுத்துகிறார்கள் என நினைக்கிறன், தனிச்சையாக தேர்வு செய்யப்பட்ட புதிய ஏற்பாட்டின் வல்லுனர்கள் சிலரை கொண்டிருக்கும் சிறிய கூட்டமாக இருக்கிறது.

இன்றைக்கு வரலாற்று நாயகர் இயேசுவை பற்றிய விவாதங்களில் எழும்பும் கேள்விகளை குறித்து பார்க்க இருக்கிறோம் பொதுவாகவும் புதிய ஏற்பாட்டிற்கு வெளியிலும் இயேசுவை குறித்த பலதரப்பட்ட வரலாற்று உண்மைகள் சரித்திரத்தில் சொல்லப்படும் இயேசுதான் கிறிஸ்த விசுவாசத்தின் இயேசு என்பதை நிருபிக்கும்விதமாக இருந்து வருகிறது.

எனது விருந்தினர் உலக தரம்வாய்ந்த சித்தாந்த வாதியான Dr. ஹேபர்மாஸ், புத்தகங்களையும் எழுதியிருக்கிறார், வரலாற்று இயேசு. அவர் தமது Ph. D. யை மிக்கிகன் மாநில பல்கலைகழகத்தில் பெற்றார், இரண்டாவது டாக்டர் பட்டத்தை ஆக்ஸ்போர்டிலுள்ள இம்மானுவேல் கல்லூரியில் பெற்றார், இங்கிலார்ந்து. Dr. ஹேபர்மாஸ் லிபர்டி பல்கலைகழகத்தில் சித்தாந்தம் மற்றும் இறையியல் பாடபிரிவின் சேர்மேனாக இருக்கிறார் இவர் இயேசுவின் வாழ்கையை குறித்து நூற்றிற்கும் மேற்பட்ட கட்டுரைகளை எழுதியிருக்கிறார் அவை சில பத்திரிக்கைகளிலும் வெளியிடப்பட்டு வருகிறது.

இந்த புதிய ஜான் அன்கேர்பெர்க் நிகழ்ச்சியில் இணைந்திட அழைக்கிறோம் ஏன் இயேசு ஆதிகாலத்தில் வாழ்ந்தவர்களில் அதிக வரலாற்று ஆதாரங்களை கொண்டிருக்கிறார் என்பதை அறிந்துகொள்ளுங்கள்.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** வணக்கம். கடந்த சில வாரங்களாக Dr. கேரி ஹேபர்மஸ் இன்றைக்கு விமர்சக வல்லுனர்கள் இயேசுவை பற்றி ஏற்றுக்கொள்ளும் 12 வரலாற்று ஆதாரங்களை குறித்து பதிவு செய்து வருகிறார். அவர் இன்னும் கொஞ்சம் விளக்கி சொல்லி இந்த நான்கு உண்மைகளை மற்றும் புரிந்துகொண்டால் போதுமானது என்றார், இவை வலுவான ஆதாரங்களாக இருக்கிறது, பாரம்பரிய விசுவாசத்தின் அடித்தளம் இயேசுவை குறித்த கண்ணோட்டத்திற்கு உகந்த வரலாற்று ஆதாரமாகும். இன்றைக்கு

இயேசுவின் வாழ்கையை குறித்த மிகவும் எதிரானது என்ற கருத்தை பார்க்க இருக்கிறோம் – தமது சீஷர்களுக்கு அவர் காட்சியளித்தது. இந்த ஆதாரம்தான் Dr. ஹேபர்மசை அவர் மிகிங்கன் மாநில பல்கலைகழகத்தில் இறைநம்பிக்கை இல்லாமல் Ph. D பட்டபடிப்பின்போது கிறிஸ்துவை ஏற்றுகொள்ளும்படி செய்தது. கவனியுங்கள்:

**Dr. கேரி ஹேபர்மாஸ்:** கடந்த வாரம் ஒன்றை சொல்லும்போது நானும் 10 இறைநம்பிக்கை இல்லாதவனாக கிறிஸ்தவர்களின் நம்பிக்கையின் பட்டியலை குறைக்க வைத்திட முயன்றளவிற்கு விவாதித்திடுவேன். என்ன சொல்வேன்னா, " உங்களுக்கு இதை பற்றி தெரியாது, மலும், உங்களால தெரிந்துகொள்ளவும் முடியாது, உங்களால இதையெல்லாம் தெரிந்துகொள்ள முடியாது. ஆனா சில உண்மைகளை என்னை உறைய செய்தது. அதனால என்னோட சிந்தாந்த படிப்பை மேற்கொண்டான் மிக்கிங்கன் மாநில பல்கலைகழகத்தில் படித்தேன் அதுவும் எனது பாடம் கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல். மிகிங்கன் மாநில பல்கலை கழகம் ஆர்தடக்ஸ்சிற்கு பெயர் போனது கிடையாது. அங்கிருந்த சில பேராசிரியர்கள் நான் சொன்னதை கேட்டு எந்தவித உணர்வுகளையும் வெளிபடுத்தவில்லை, ஆனா மாறாக, "பரவாயில்ல. வேதாகமத்தில் இது சம்பவித்தது என்று சொல்லப்படுவதால் இப்படி சொல்ல வேண்டாம் என்றனர்."எனக்கு அப்படி சொல்வதில் உடன்பாடு இல்லை ஏன்னா அது என்னோட கருத்து கிடையாது. அதனால் எல்லாவற்றிற்கும் மேலான நிகழ்வை பற்றிய ஆதாரங்களை பார்க்க துவங்கினேன், இயேசு காட்சியளித்தார் என்ற உண்மை.

இப்ப, இது நமக்கு எப்படி தெரியும்? அவருடைய தரிசனத்தை பார்க்க முன், எல்லாரும் ஒப்புக்கொள்ளுகிற ஒரு பகுதியை சொல்லி துவங்கும் படியாக விரும்புகிறேன். ரெஜினால்ட் புல்லர் சொல்கிறார், "இது புதிய ஏற்பாட்டில் மறுக்கமுடியாத சம்பவமாகும். சீஷர்களாவது தாங்கள் உயிர்த்தெழுந்த இயேசுவை தான் பார்த்ததாக நம்பினார்கள்."

அந்த உண்மை எதற்காக? ஏன்னா ஒருவர் ஒரு உண்மைக்காக தன்னுடைய ஜீவனையும் கொடுக்க முன்வருவதற்கு , காரணம் – அதை மறுப்பில்லாமல் ஒப்புகொள்வதினால் தான்; அவங்க கிரேநேடில் இருந்து குதிப்பது பன்றது; அது இரண்டாம் உலக போரின் கமிகாசி விமான ஓட்டிகளை போல இருக்கலாம்; அது இஸ்லாமிய தற்கொலை படையை போல இருக்கலாம்; ஜிம் ஜோன்சின் சீடர்களை போல இருக்கலாம்; டேவிட் கோரேஸ் சீடர்கள்; அல்லது தங்கள் வாழ்வை மாய்ந்து கொள்ள வேண்டும் என்று நினைத்து அவ்னகலே விஷயத்தை சாப்பிட்டு விழுந்து இறந்திடும் போன்றவர்களை போல இருக்கலாம். இதுல கவனிக்க வேண்டிய காரியம் என்ன? இதுல சில விஷயங்களை நம்மால் புரிந்துகொள்ள முடியாது, ஆனா முடிவாக என்ன சொல்கிறார்கள் என்றால்: அவர்கள் எதற்காக மரிக்கிறார்கள் என்று அவர்களுக்கு தெரியும். வேறு எந்த விளக்கமும் இல்லை. அவங்களுக்கு UFO வர்றாங்கன்னு நம்பிக்கை இருந்தது. அந்த செயல்களுக்கு பின்னால் UFO இருந்ததுன்னு அவங்க நம்பினாங்க. தங்களுடைய நாட்டுக்காக மரிப்பது தகுதியானது என்று நினைத்தார்கள். தங்களுடைய சித்தாந்தங்களை நம்பினார்கள், அங்கிருந்த கம்மியூனிச நிலை, தகுதியானது என்று நினைத்தார்கள். சீஷர்களுக்கும் இது பொருந்தும். இதற்கான ஒரே விளக்கம் அவர்கள் இயேசு மரித்தோரில் இருந்து உயிர்த்தார் என்பதை விசுவாசித்தார்கள். ருடல்ப் புல்ட்மேன் 1940 தனது கருத்தரங்கு

கட்டுரையான, புதிய ஏற்பாடும் கட்டுக்கதையும்  என்பதில், சொல்லுகிறார், வெளியில் உள்ள வரலாற்றாளர் ஒன்றை மட்டும்தான் சொல்ல முடியும். "ஆதிகால கிறிஸ்தவர்கள் உயிர்த்தெழுந்த இயேசுவை கண்டதாக நம்பினார்கள்." நான் உங்களுக்கு சொல்லுகிறேன், இந்த உண்மை உங்களிடம் இருந்தால். திறவுகோல் உங்ககிட்டதான் இருக்கிறது. மற்ற அனைத்தும் இயேசு காட்சியளித்தது வரை நேர்த்தியாம அமைப்பட்டிருக்கும்.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** அடுத்து, நீங்க ஒருவேளை கேட்கலாம், "நீங்க சொல்றபடி சீஷர்கள் இயேசுவை கண்டதாக விசுவாசித்தார்கள் என்பதை ஏற்றுகொள்கிறேன், இருந்தாலும் இது எப்படி வந்தது :இயேசுவை கண்டதாக ஏன் நினைத்தார்கள், அவரைத்தான் அவர்கள் பார்த்தார்களா? ஒரு நாத்திகனாக, Dr. ஹேபர்மஸ் இந்த கேள்வியினால் தனக்குள்ளே போராடின காலம் உங்க. அவர் கண்டறிந்ததை இங்கு சொல்கிறார்.

**Dr. கேரி ஹேபர்மாஸ்:** சரி, நான் சொன்னது போல, இதை கேட்டுகொண்டிருக்கிற பலருக்கு உண்டாகிற கற்பனை இதுதான், " நானே அதை உங்களுக்கு சொல்றேன். சீஷர்கள் இயேசுவை பார்த்ததாக நம்பினார்கள். தாங்கள் பார்த்ததாக நினைத்தார்கள் என்பது எப்படி அவர்கள் பார்த்தார்கள் என்று மாறினது?

இதை உங்களுக்கு சுருக்கமாக சொல்லுகிறேன் என்னுடைய உதாரணத்தின் மூலம் சொல்ல விரும்புவதை சொல்லுகிறேன். அவர்கள் உயிரோடு எழுந்த இயேசுவை தான் பார்த்தார்கள் என்பதற்கு 2 முக்கிய காரணங்கள் இருக்கிறது. நான் உங்களுக்கு சொன்ன ஆறு உண்மைகளும் அதற்கு முன்பு நான் கண்ட ஆதாரங்களும், ஒரு உண்மையை எனக்கு சொல்கிறது, முதாவதாக, இயற்கையின் கோட்பாடுகள் அங்கு வேலை செய்யல. உயிர்த்தெழுந்த இயேசுவைத்தான் பார்த்தோம் என்று அவர்கள் நம்பினார்கள். ஆனால் சிலர் அவங்களுக்கு பிரம்மை உண்டானது என்கின்றனர். நாங்க பார்த்தோம், இந்த ஒருசில உண்மைகளை வைத்து பார்க்கும்போதே, மிரம்மை என்பதற்கு அங்கு இடமில்லை. அப்ப, ஒருபக்கம் அவர்கள் உயிர்த்தெழுந்த இயேசுவை பார்த்ததாக நினைத்தார்கள். ஒருவேளை என்ற வார்த்தையை ஜனங்கள் அதிகமாக பயன்படுத்துவார்கள். அதல்லாம் வேலை செய்யவில்லை. இயற்கையின் கோட்பாடு தோற்றுப்போனது. அதற்கு காரணம், அவர்கள் இயேசுவை பார்த்ததாக நம்பினார்கள் என்ற பதம் இயேசுவை பார்த்தார்கள் என்று மாறியதற்கு இரண்டாவது காரணம் அவர்கள் அவரை பார்த்தார்கள் என்பதை நிருபிக்கும்விதமான பல ஆதாரங்களை அந்த ஆறு உண்மைகளும் கொண்டு இருக்கிறது  அவரை அவர்கள் பார்த்தார்கள்- அதனால்; அவர்கள் வாழ்க்கையே மாறியது. இதுதான் அவர்களுடைய பிரசங்கமே. எப்படி பவுல் இதுல இணைந்தார்? எப்படி யாக்கோபு இதுல இணைந்தார்? அவங்க எல்லாரும் தாங்கள் பார்த்ததை ஒப்புகொண்டார்கள்.

சரி, இதை நீங்கள் புரிந்துகொள்ளும்படி உங்களுக்கு ஒரு கதையை சொல்லுகிறேன். மற்ற மார்க்கங்களில் இல்லாத என்னது இந்த கிறிஸ்தவத்தில் இருக்கிறது? ஜிம் ஜோன்ஸ் சீடர்கள் அவர்தான் மேசியா என்று நம்பினார்கள். அவங்க சொன்னது தவறு. டேவிட் கொரேஷும், அப்படிதான். கேல் – பாபை சேர்ந்த மக்கள் – UFO தங்களுக்காகத்தான்

வருகிறது என்று நம்பினார்கள். நம்பிக்கைகளில் யாரு வேண்டுமானாலும் தவறு செய்திடலாம்.

சீஷர்களிடம் காணப்பட்ட வித்தியாசமான ஒன்றை பற்றி சொல்லுகிறேன். அவர் இயேசுதான் மேசியா அவர் மரித்தோரில் இருந்து உயிர்த்தார் என்று வெறுமனே சொல்ல வில்லை. அவங்க மைய பொருள் என்னன்னா, “நாங்க அவரை பார்த்தோம்” பவுல் சொல்கிறார், “கிறிஸ்து ஒருவேளை மரணத்தில் இருந்து உயிர்த்தெழாதிருந்தால்,” தரிசனமானத்தை பார்த்தவர்களின் பட்டியலை கொடுத்த பிறகு (1 கொரிந்தியர் 15), அப்படி இல்லாவிட்டால் நம் விசுவாசம் விருதா என்கிறார்.”

சரி, இது ஒரு பொதுவான அனுபவம் போல இருக்கலாம், சரி, காய் கடையில காய்கறி வாங்குகிறோம். நா காய்கறி கடைக்கு வந்தபோது நேற்று இரவு உங்களை பார்த்து பேசியிருந்தா என்ன பேசினோம் என்று ஞாபகம் இருக்கும், “நினைவிருக்கா, நாம பசள கீரையை பற்றி பேசினோமே?” இப்ப, நம்முடைய நண்பர்கள் நிறைய பேர் அந்த கடையில் இருக்க நாம எல்லார் கிட்டயும் ஒரே நேரத்தில் போய் பசீட்டு இருந்தா அதாவது ஒருத்தரை ஒரு இடத்தில் பார்க்க, அப்பறம் இரண்டு பேர், ஒரு இடத்தில் நான் மட்டும்; இன்னொரு இடத்தில், அங்க ஐந்து பேர் இருப்பாங்க. இதை இன்னும் தெளிவா புரியற மாதிரி சொன்னளுன்னா, ஒரே நேரத்தில் காய்கறி கடையில் பதினோரு பன்னிரண்டு பேர் உங்களை பார்க்கிறார்கள். சரி, இப்படி இருந்தா நிச்சயம்நீங்க யார்கிட்டயும் போய், “ஆ, நீங்க என்ன நேற்று இரவு பார்க்கலன்னு சொல்ல மாட்டீங்க” – குறிப்பா உங்ககூட உங்க அருகில் இருக்கிற நபர் உங்ககிட்ட நேற்று உங்களை நான் காய்கறி கடையில் பார்த்தேன் என்றால் மறுப்பு சொல்ல முடியாது. தனியாகவோ, இரண்டு மூன்றாகவோ, குளுவினராகவோ உங்களை பார்த்திருப்பார்கள்.

சீஷர்கள் இதை மட்டும் அறிக்கை செய்திடவில்லை, “ அவர்தான் தேவனுடைய குமாரன் என்பதை விசுவாசிக்கிறேன். அதை அவரை உயிரோடு எழுப்பினது மூலம் தேவனும் உறுதி செய்தார் என நம்புகிறேன். அவர் உயிர்த்தெழுந்தார் என்று நம்புகிறேன்.” இந்த சில அறிக்கைகள் மற்றவர்கள் சொல்கிற காரியங்களை விட அதிக வித்தியாசமானது ஒன்றுமில்லை என்பது போல தோன்றிடலாம். ஆனால் சீஷர்கள் இதில் சிலவற்றை சேர்த்திருக்கிறார்கள். “ நான் கண்டேன். நான் தொட்டேன். இது தனிநபரின் அனுபவங்கள். நீர் வெளிப்பட்டபோது, நா அதிர்ச்சி அடைந்தேன். ஆனால் நீங்க தொன்றினபோது, “ சுவிசேஷங்கள் சொல்கிறது, “அவர் புசித்தார். நடந்தார். கரையில் உணவு சமைத்தார்.” அதாவது, சாதாரண வேலைகளை செய்துகொண்டு இருந்தார். அதாவது காய்கறி கடை அனுபவம் போல.

சரி, காய்கறிக்கடையில் முதல்ல தனியா ஒருத்தர பார்க்கிறோம் அப்பறம் இரண்டு பேர் அப்பறம் ஐந்து பேர் அப்பறம் பத்து என்று இறுதியாக பவுல் சொல்றமாதிரி, ஒரே நேரத்தில் ஐந்நூறு இருந்தா எப்படி இருக்கும். சரி. ஒரு காய்கறி கடையில இப்படி நடக்காது, என்ன சொல்ல வர்ரேன்னா, நீங்க ஒருத்தரை பார்க்கும்போது, அவங்கள ஒரு கூட்டத்திற்கு நடுவில் பார்த்தாலும் நினைவிருக்கும். ஆனா உங்களோட அடக்க ஆராதனையில் போன வாரம்தான் பங்கு எடுத்தேன் என்றால்? போன வாரம் உங்க அடக்க ஆராதனைக்கு நான் வந்திருந்தேன் ஆனா உங்களை இன்றைக்கு இரவு காய்கறி

பார்க்கிறேன்னா எப்படி இருக்கும், என்னோட இருக்கிற எல்லாருமே உங்களை பார்க்கிறாங்கன்னு, இருந்தா? உங்களைதான் பார்த்தோம் என்று ஆதாரமாக எத்தனை பேரை சாட்சிக்கு நிறுத்தனும்? அதிகமாக இருந்தா வலுவா இருக்கும். ஒன்றை விட இரண்டு சாட்சிகள் நல்லது. எல்லாவிதமாக காரியங்களை சொல்ல முற்படுவோம். ஆனா இதை கவனிங்க, இரண்டு காரியத்துல எனக்கு உடன்பாடு இருக்கலாம். நா பெட்டியில சடலத்தை பார்த்தேன். நா நீங்க செத்துபோனபோது உங்க அருகில் வந்திருக்கிறேன் உங்கள தொட்டு கூட பார்த்திருக்கேன். இப்ப உங்களை காய்கறி கடையில பார்க்கிறேன், எப்படி இதை விளக்கி சொல்றதுன்னு புரியல, ஆனா இது உண்மையில் வியப்பான நிகழ்வுதான்: நீங்க உணவுகளை வாங்குவதை பார்த்தேன். நடக்கிறதை பார்த்தேன், பேசுறதையும் பார்த்தேன்.

என்ன சொல்றேன்னா, சீஷர்கள்எந்தவித அர்த்தமும் இல்லாம இயேசுவை நம்புகிறேன்னு சொல்லலா, அவங்க உண்மையில், இயேசுவை பார்த்தோம்னு சொல்றாங்க. எப்படியாவது நாம, நாங்க பார்த்தோம் என்ற காரியத்தை நாம் நேர்மையாக ஏற்றுகொள்ள வேண்டும். லூவிஸ் சொன்னது போல, உயிர்த்தெழுதல் என்பது அதிசயமான ஒரு நிகழ்வுதான். நடந்தார் பேசினார் உணவு சமைத்தார் என்று இருக்கிறது, இதெல்லாம் உயிரோடு இருந்தா சாதாரணாமா நடக்கிற விஷயங்கள்தான். காய்கறி கடை நிகழ்வும் சாதானமானதுதான். போன வாரம் உங்களை பார்த்தேன்; இன்றைக்கு உங்களை காய்கறி கடையில பார்க்கிறேன். உங்களுக்கு தெயர்யுமா? அதை என்னோட வாழ்நாள் முழுவதும் நான் மறக்கவே மாட்டேன். எனக்கு சந்தேகம் வரும்போதெல்லாம், என் நண்பர்களிடம் போவேன் அவங்களும், நாங்களும், உன்னோடதா அப்ப இருந்தோம் என்பார்கள். நாங்களும் பார்த்தோம் என்பார்கள்." இதைதான் இங்கு பார்க்கிறோம் என்று நினைக்கிறேன். ஆமா, சீஷர்கள் விசுவாசித்தார்கள். இயேசு உயிரோடு எழுந்தார் என்பதை நம்பினார்கள். அவர்தான் மேசியா என்பதை நம்பினார்கள். அதற்கும் அப்பார் பட்டு, மற்ற யாருக்கும் இல்லாத ஒரு பிடிமானம் அவர்களுக்கு இருக்கிறது: உன்னை காய்கறி கடையில் பார்த்தேன்" எல்லாரும் சேர்ந்து உங்களை பார்த்தோமே." என்னுடைய விசுவாசம் உங்களை காய்கறி கடையில் பார்த்ததை சார்ந்து இருந்தா், அது ஸ்திரமானது என்று நம்புகிறேன். சீஷர்கள் பரவசமாக இருந்ததற்கும் அவரை பார்த்ததாக விசுவாசித்ததற்கும் இதுதான் மிகப்பெரிய காரணம் என்று எனக்கு தோன்றுகிறது.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** சரி, 250 வருடங்களுக்கு முன்பாக அற்புதங்களை குறித்த ஒரு பிரபலமான கட்டுரையில், டேவிட் ஹியூம் சொல்கிறார் ஜனங்கள் அற்புதங்களை ஏற்றுகொள்ளாததற்கு காரணம், "அதற்கான ஆதாரங்கள் எல்லாம் அந்த நிகழ்வுகளை மேம்மடுத்தி காட்டுகிறது." அதாவது, நாம் அனைவர்க்கும் உள்ள அனுபவத்தின்படி இதுவரைக்கு மரித்த யாரும் உயிரோடு வந்ததாக நாம பார்த்ததில்லை அதனால் அது நடக்காதுன்னு தெரியும். ஆனா இந்த புதிய ஆதாரம் எப்படி நம் மனதை மாற்றிக்கொள்ள செய்தது? இது இயேசுவின் சீஷர்களுக்கு மட்டும் அனுமதிக்கப்பட்ட புதிய காரியமா? Dr. கேரி ஹேபர்மஸ் ஆமாம் என்கிறார். கவனியுங்கள்:

**Dr. கேரி ஹேபர்மாஸ்:** சில நிமிடங்களுக்கு முன்பு காய்கறிக்கடை உதாரனத்தை பற்றி சொன்னேன், அதாவது, அதாவது காய்கறி கடையில் உங்களை பார்த்தேன் என்ற அந்த

காட்சி எளிதில் புரிந்துகொள்ள கூடியதாக இருக்கும். அதாவது, என்னோட நண்பர் இந்த உதாரணத்தை பயன்படுத்தினார், அதுல இன்னும் கொஞ்சம் வித்தியாசம் அதாவது, விதம் கொஞ்சம் மாறியிருந்தது: ஒரு மனிதனுடைய அடக்கத்திற்கு போன வாரம் நான் போயிட்டு வந்திருக்க, இந்த வாரம் அவரோட பயன் வந்து, நேற்று இரவு அப்பாவை பார்த்தேன் என்றால் எப்படி இருக்கும்.

என்னோட முதல் கருத்து இதுதான், "அப்படியா, சரி! ஆல்ரைட், இப்ப அவன் என்னை சம்மதிக்க வைக்கலாம், "ஹே, கவனி, உண்மையா சொல்றேன்."

இப்ப எனக்கு அது விளங்க ஆரம்பிக்குது – இங்க நடப்பதை கவனிங்க. அவன் இதை உண்மையாய் நம்புகிறான். சீஷர்களும் அப்படிதான் இருந்தாங்க. அவன் இதை உண்மையில் விசுவாசித்தான். நா யோசித்தேன், இது இன்னும் கொஞ்சம் சிக்கல இருந்திருக்குமோ. அவனுக்கு ஒருவேளை மன பிரம்மை உண்டாகியிருக்கலாம். ஆனா இது மன பிரம்மை அல்ல என்பதை என்னால் பல காரணங்களை சொல்ல முடியும்.

இறுதியாக, ஒருவேளை, நான் பேசிக்கொண்டு இருக்கும்போது, அங்க அவங்க அப்பா வருகிறார். உண்மைய சொன்னா, சில காரியங்கள் சமநிலைகளை குறித்து நான் விவாதிப்பது, உண்டு, அது எப்பவும் நடக்கிற விஷயம்தான். இப்ப, என்னோட கருத்து இதுதான். டேவிட் ஹியூம் விவாதித்த ஒரு காரியம் அதாவது 250 ஆண்டுகளுக்கு முன்பு, பொதுவாக இயற்கையின் விதிப்படி, உதாரணாமாக, மரித்தான் எழுவதில்லை என்று சொல்லப்பட்டது. நா என்ன சொல்றேன்னா சில சூழ்நிலைகளில், அதிசயங்கள் நடக்கும் என்பதை ஒப்புகொள்ள வேண்டும். அல்லது வேறு சில நேரத்தில், இவர் மரணத்தில் இருந்து உயிர்த்தார் என்பதை குறித்த விவாதங்களையும் எதிர்கொள்ள வேண்டியிருக்கும். எனக்கு எப்படி இது தெரியும்? முன்பே சொல்லப்பட்டவைகளில் இருந்து, கொடுக்கப்பட்ட ஆதாரங்கள் மூலமாக. என் நண்பர் அவரை பார்த்தார். இதுல மனபிம்மைக்கு இடமில்லை. ஒன்றாக அவரை பார்த்தனர்.

சரி, நம்முடைய நண்பர்களில் சிலர் சுமார் பத்துபேர் அவரை பார்த்திருந்தால் என்னவாகும்? அதாவது, டேவிட் ஹயூமின் பொதுவான கூற்று, மரித்தவன் எழும்ப மாட்டான், அது சில சூழ்நிலையில் மீறப்பட்டு இருக்கலாமே. ஏன்? ஏன்னா இந்த நபர் ஒரு வாரத்திற்கு முன்பு மரித்ததற்கு திடமான ஆதாரங்கள் இருக்கிறது, இன்றைக்கு என்னால விளக்கி சொல்ல முடியாத ஆதாரம் என்னிடம் இருக்கிறது, தனிநபராக குழுவாக, அவர் உயிரோடிருப்பதை பார்க்கிறார்கள். இதல்லாம் நம்பமுடியாத விஷயங்கள் என்ற கருத்தை சில நேரங்களில் தள்ளிவிடும் படியான உண்மைகள் கூடிகொண்டே இருக்கிறது.

நான் சொல்கிற காரியம் இதுதான். அதாவது, பொதுவாக சொல்வார்கள், ஆனால் இந்த முறை, இதுதான் நடக்குதுன்னு எனக்கு தோன்றுகிறது. அவர பார்த்தேன்னுதான் நினைக்கிறன். இந்த நிலைதான் சீஷர்களுக்கும் இயேசுவுக்கும் இடையில் நடந்தது.

சரி, இப்ப அந்த அரை டசன் ஆதாரங்களை பார்க்கலாம். இங்க இருக்கிற விஷயங்கள் இயேசு உயிரோடு எழுந்தார் என்பதை குறிக்கிறதா? அவர் மரித்தார். மூச்சு திணறல்

உண்டானது. ஸ்ட்ராஸ் சொன்னதுபோல, திரும்ப வருவார் என்ற கருத்து உயிர்த்தெழுதலை ஏற்றுக்கொள்ளும் படி முடியாது. சரியா?

இரண்டாவதாக, நம்மிடையே நான் உயிர்த்தெழுந்த இயேசுவை பார்த்தேன் என்று சொல்கிறவர்கள் இருகிறார்கள்.

மூன்றாவது, அவர்கள் வாழ்கையில் மாற்றம் உண்டானது ... அவருடைய போதனைகள் அல்லது அவருடைய வாழ்க்கை முறையினால் உண்டான மாற்றமல்ல அவரை பார்த்ததினால் உண்டான மாற்றம். பவுல் கிறிஸ்துவை பற்றி சொல்லும்போது, அவர் உயிரோடு எழும்பாமல் இருந்திருந்தால், நம்முடைய விசுவாசம் விருதா என்கிறார்.

நான்காவது, பவுல் என்கிற பெயருள்ள ஒருவர் இருந்தார். அவர் கிறிஸ்தவர்களை கொலை செய்யும்படி போயிட்டு இருந்தார். உயிர்த்தெழுந்த இயேசுவை பார்க்கும்படியான மனநிலையில் அவர் அப்போது இல்லை, பூம்! இயேசு அவனுக்கு முன் வந்தார். அவனை தள்ளினார். குருடனானான், அப்போஸ்தலர் நடபடிகள் இதைதான் சொல்கிறது. பவுலே இதை 1 கொரிந்தியரில் இரண்டு முறை சொல்லியிருக்கிறார், "உயிர்த்தெழுந்த இயேசுவை பார்த்தேன்."

யாக்கோபை பற்றி என்ன சொல்வீங்க, குடும்பத்தில், ஒருவர் நாத்திகர்? அவரும் உயிர்த்தெழுந்த இயேசுவை பார்க்கிறார்.

ஒவ்வொரு கட்டத்திலும், என்ன சொல்ல விரும்புகிறேன் என்றால், நிறைய சாத்தியகூறுகள் எழும்ப துவங்குகிறது. பொதுவான நியதியின் படி – மரித்தவன் உயிர் பெற முடியாது – உண்மைகள் அதிகமாக வலுவாக இருப்பதினால் இந்த காரியத்தில் இந்த விஷயம் கொஞ்சம் பொருந்தாது போலதான் தனித்து நிற்கிறது.

எப்போதுமே சாத்தியகூறுகளை சார்ந்துதான் நாம் வாழ்ந்து வருகிறோம். இப்போது நீங்கள் ஒரு தீர்மானத்தை எடுக்க வேண்டும்: இது உண்மைதானா? இதுதான் ஆதாரமா? இது நடந்திருக்கலாம் என்று என்னுடைய முடிவை சொல்லாமல், ஆதாரங்களை முன்வைத்து என்னால் பேச முடியுமா, வாவ்! அவர் உயிர்த்தாரா? உங்களால முடியும் என்று நினையுங்கள். நான் என்ன சொல்கிறேன் என்றால், இதுதான் ஆதாரங்களுக்கு மேல் ஆதாரங்கள் பெருகிய போது சீஷர்களுக்கு நடந்த காரியமாக இருக்கிறது, லூக்கா இதை விழுந்து போகாத நிருபணங்கள் என்கிறார், அப்போஸ்தலர் 1:3

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** தனிபட்டவிதத்தில் உங்களுக்கு ஒரு முக்கியமான கேள்வி. இயேசுவை குறித்த வரலாற்று உண்மைகளை நீங்கள் விசுவாசித்தால், அது உங்களை கிறிஸ்தவர்களாக்கிடுமா? இல்லை. சரி, அப்ப, விசுவாசம் என்றால் என்ன? ஒருவர் எப்படி கிறிஸ்தவராக முடியும்? Dr. ஹேபர்மஸ் இந்த கேள்விகளுக்கு பதில் அளிக்கிறார். இதை கவனமாக கேட்க்கும்படி விரும்புகிறேன்.

**Dr. கேரி ஹேபர்மாஸ்** சரி, அதாவது, இப்போதைக்கு மற்ற பக்கத்தில் இருந்து ஒரு எதிர்ப்பு வருகிறது என்று வைத்துகொள்வோம். கிறிஸ்தவர்கள் சொல்கிறார்கள், "வாவ், இந்த ஆதாரங்கள் எல்லாம் நல்லாத்தான் இருக்குது, ஆனா விசுவாசம் என்னாச்சு? அதாவது, உன்மைகள் நம்மை தேவ ராஜயத்திற்குள் கொண்டு செல்லாது. ஆனால்

விசுவாசம் என்பது பிரயோஜனமில்லாத ஒன்றல்ல. புதிய ஏற்பாட்டில், எந்த எதிர்பாப்பும் இல்லாம, விசுவாசமானது நம்பிக்கையின் அடிப்படையில் அமைந்திருந்தது. பவுல் சொல்கிறார், 1 கொரிந்தியர் 15 1ல பாருங்க, நான் வந்து உங்களுக்கு பிரசங்கித்த செய்தியானது, குறைந்தது மூன்று முறை சொல்கிறார். இதுதான் புதிய ஏற்பாட்டில் சுவிசேஷத்திற்கான விளக்கமாக இருக்கிறது: "கிறிஸ்துவின் தெய்வத்துவம், மரணம், உயிர்த்தெழுதல்." பவுல் சொல்கிறார், நீங்கள் இவற்றை விசுவாசித்தால், இரட்சிக்கப்படுவீர்கள், நித்திய ஜீவனையும் பெற்றுகொள்வீர்கள்."

கிறிஸ்தவத்தில் மைய பொருள் என்று இருக்கிறது. அதைதான் சுவிசேஷம் என்று சொல்கிறோம்: தெய்வத்துவம், மரணம், இயேசுவின் உயிர்த்தெழுதல். ஆனால் இந்த சுவிசேஷத்தின் பதிவுகளில் இருந்து இரட்சிப்பிற்கு கடந்து செல்வது எப்படி? ஏதோ ஒன்று இங்கு குறைகிறது. அதாவது உண்மைகள் கூட்டல் விசுவாசம் தான் இரட்சிப்பாகும். இது மட்டுமா போதுமானது அல்ல. புதிய ஏற்பாட்டில், உன்மைகள் மீது நமது விசுவாசத்தை வைப்பது இல்லை. வரலாறு எனக்கு பிடிக்கும். ஆனால் புதிய ஏற்பாடுவிசுவாசம் வரலாற்றை சார்ந்தது அல்ல, அது இயேசுவின் வாழ்க்கையை சார்ந்ததாகும். அல்லது எளிமையாக சொன்னால், யதார்த்தமாக சொன்னால், சுவிசேஷத்தின் இயேசுவின் தன்மைகள் – தெய்வத்துவம், மரணம், உயிர்த்தெழுதல் + விசுவாசம் = இரட்சிப்பு.

விசுவாசம் என்பது இயேசுவின் மீது இருக்கவேண்டும். அதாவது, அது ஒரு திருமணத்தை போன்றது. இந்த பெண் எனக்கு ஏற்றவளாக இருப்பாள் என்று எனக்கு தெரியும். இந்த விஷயத்தில் சிறந்தவர், இதுல சிறந்தவள், இதுல சிறந்தவள். எல்லாம் சரி. ஆனா விஷயம் இதுதான், என்னன்னா, எல்லாம் சரி ஆனா திருமணம் செய்துகொள்ள மாட்டேன் என்று சொல்வது. இது தான் புதிய ஏற்பாட்டின் நிலையென்று நினைக்கிறேன். எல்லாமே தெரியும் ஆனா இயேசு கிறிஸ்துவின் மீதுள்ள விசுவாசத்தின் நிலையை புதிய ஏற்பாடு காட்டுகிறது. இயேசு இதை செய்தார் அதை செய்தார் அப்படி செய்தார் என்று எல்லாவற்றையும் ஒப்புகொள்கிறோம், மேலும், அவர் எனக்காக, என் பாவத்திற்காக மரித்தார், அடக்கம் பண்ணபட்டார், மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்தார் என்று தெரியும். அவர் தேவனுடைய குமாரன் என்றும் தெரியும். ஆனா புதிய ஏற்பாட்டில், அதை நான் நம்புகிறேன் என்றும், அவரை நம்புகிறேன் என்றும் சொல்லாவிட்டால், என்னை அவருக்கு நான் அர்ப்பணிக்காமல் இருந்தால், நான் கிறிஸ்தவன் அல்ல. இதற்கான அர்த்தம் இதுதான் என்பதை நாம் நன்றாக புரிந்துகொள்ள வேண்டியதுதான் முக்கியமான திறவுகோலாகும் என்று நினைக்கிறேன். சுவிசேஷத்தின் இயேசுவை குறித்த உண்மைகள், அதோடு விசுவாசம், இதினால் இரட்சிப்பு உண்டாகிறது – இதைதான் 1 கொரிந்தியர் 15ல் உள்ள சில வசனங்களில் பவுல் சொல்ல விரும்புகிறார் என்று நினைக்கிறன்.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** கேரி ஹேபர்மஸ் உண்மைகளும் விசுவாசமும் இரட்சிப்பிற்கு நிகரானது என்கிறார். உங்களை கேட்கிறேன், உங்கள் மீது நம்பிக்கைவைக்காமல் உங்கள் இரட்சிப்பிற்காக இயேசுவை நம்புகிறீர்களா? இயேசுவை குறித்த வரலாற்று உண்மைகள் அனைத்தும் ஒருவர் அவரை விசுவாசிக்க போதுமான அஸ்திபாரமாக

இருக்கிறது. ஆனா இந்த உண்மைகள் மட்டுமே உங்களை இரட்சிப்பது இல்லை. இந்த உண்மைகளுக்கு பின்னாலிருக்கும் இயேசுதான் உங்களை இரட்சிக்கிறார். இதுவரை கிறிஸ்துவை ஏற்றுகொண்டவர்களுக்கு தெரியும் இயேசு உண்மையானவர் என்பதை அறிவார்கள். ஆனால் அனுபவ ரீதியாக அவரிடத்தில் வந்து ஜெபிக்கிறார்கள் தாங்கள் பாவிஎன்று அறிக்கையிடுகிறார்கள் தங்கள் நம்பிக்கையை அவர்மீது வைக்க முன்வருகிறார்கள். வேதம் சொல்கிறது எல்லா ஆண்களும் பெண்களும் தேவனிடமிருந்து பிரிக்கப்பட்டோம் ஏன்னா நீதியின் பிரமாணங்களை மீறி நடந்தோம்; அவருக்கு விரோதமாக பாவம் செய்தோம், அதை உணர்ந்திருக்கிறோமா? இரண்டாவது, வேதம் சொல்கிறது இயேசு சிலுவையில் இருந்தபோது, நம்முடைய பாவங்களை ஏற்றுக்கொண்டு நமக்காக அவர் நமக்கு பதிலாக மரித்தார். நம்முடைய தண்டனையை நமக்குரிய விளைவை அவர் ஏற்றுக்கொண்டு முழுவதும் தீர்த்துவிட்டார். அது நமக்கு கிடைத்த ஈவு.

இப்போதும் நீங்கள் இயேசுவிடம் வந்து நான் பாவி என்று ஒப்புக்கொண்டு, என்னை மன்னியும் என்று கேட்டால், அவர் நிச்சயம் மன்னிப்பார். நீங்க ஒரே ஒரு ஜெபம் செய்தால் போதும் உங்களை அவருடைய கரத்தில் கொடுத்துவிடுங்கள். அவர் உங்களை கிறிஸ்தவராகிடுவார்; உங்கள் பாவங்களை உங்களுக்கு மன்னித்து உங்களுக்கு நித்திய ஜீவனை அருளிடுவார். வேதம் சொல்கிறது, “அவருடைய நாமத்தை நோக்கி கூப்பிட்டு தொழுதுகொள்ளுகிறவர்கள் இரட்சிக்கபடுவார்கள்.”

விசுவாசத்திற்கு உதாரணம் தர முயற்சிக்கிறேன். இரண்டு அடுக்கு மாடியில் இருப்பதுபோல கற்பனை செய்துகொள்ளுங்கள். முதல் மாடியில் தீ பிடிக்கிறது அதனால் மொட்டை மாடிக்கு ஓடுகிறீர்கள். இப்ப தப்பிக்க வழியே இல்ல. தீ அணைப்பு வண்டி வருது தீயணைப்பு வீரர்கள் ஒரு வலையை விரித்து பிடிக்கிறார்கள். அவங்க உங்களை பார்த்து உங்ககிட்ட, குதிங்கன்றாங்க.” நீங்க அந்த தீயணைப்பு வீரர்களையும் வலையையும் பார்த்து, அவங்ககிட்ட, என்னால முடியாது, பயமாயிருக்குன்றீங்க. அப்ப வீரர்கள் கேட்பாங்க, “எங்க மேல நம்பிக்கை இல்லையா? உங்களுக்கு நம்பிக்கையே இல்லையா?” அதுக்கு நீங்க, “இருக்கு, இருந்தாலும் இது இரண்டு மாடின்னு சொல்றீங்க.” அது அவங்க, அப்ப, என்ன செய்ய போறீங்கன்னு கேட்ப்பாங்க.” புகையும் நெருப்பும் உங்களை சுற்றிலும் பரவிகொண்டிருப்பதை பார்க்கிறீர்கள்.

இப்ப, அந்த தீயணைப்பு வீரர்களால உங்கள காப்பாத்த முடியுன்றத உண்மைய புரிஞ்சுகிட்டா, பாதுகக்கப்படுவீங்களா? இல்லை. உண்மையை புரிந்துகொள்வது உங்களை காப்பாத்தாது. நீங்க முடிவுசெய்து உங்களை பத்திரமா காப்பாத்த தீயணைப்பு வீரர்கள் வலைகளை பிடித்துகொண்டிருக்கிரார்கள் என்று நம்பி அங்கிருந்து குதிக்க முன்வரனும். உங்களில் சிலருக்கு இயேசுவை குறித்த உண்மைகள் தெரியும், ஆனால் இன்னும் உங்களை அவர் கரங்களில் நம்பி கொடுக்கவில்லை. இப்போது அதை செய்யவேண்டியது அவசியம்.

அதுமட்டுமில்ல, உங்களுக்கு இருக்கிற விசுவாசத்தின் அளவு உங்களை இரட்சிக்காது. நீங்க சும்மா தீயணைப்பு வீரர்கள் இருக்காங்கன்னு நினைச்சு நம்பிக்கையோடு குதிக்க பாதி வழியில் வந்தது அவங்ககிட்ட வலை இல்ல கைகளைத்தான் விரித்து நிற்கிறார்கள்

என்று பார்க்கும்போது என்ன நடக்கும். அப்ப உங்கள் விசுவாசம் எப்படிப்பட்டதாக இருக்கும்? தவறான காரியத்தில் நம்பிக்கை வைக்கும்போது அது உங்களை இரட்சிக்குமா. குறிப்பாக, அந்த வீரர்களால் உங்களை காப்பாற்ற முடியாதே? உங்களுடைய விசுவாசம் உங்களை இரட்சிப்பது இல்லை. உண்மையான தீயணைப்பு வீரர்கள் உண்மையான வலைகளை பிடித்துகொண்டு தான் நிற்கிறார்கள் என்பது முதலாவது நிச்சயித்து கொள்ளுங்கள்.

இரட்சிப்பு என்று வரும்போது, உங்களுடைய விசுவாசமல்ல இயேசுதான் உங்களை இரட்சிக்கிறார், அவர் மரணத்தில் இருந்து உயிர்த்தெழுந்தவர், தன்னை தேவன் என்றும் தன்னால் உங்கள் பாவங்களை மன்னித்து நித்தய ஜீவனை கொடுக்க முடியும் என்றும் சொன்னவர். அவர் மீதுதான் உங்கள் விசுவாசத்தை நீங்கள் பதித்திட வேண்டும். விசுவாசம் என்பது உங்கள் கரங்களை இயேசுவின் கரத்தோடு பதித்து, என்னிடம் ஒன்றுமில்லை. உம்முடைய ஈவாகிய நித்திய ஜீவனை தாரும் என்று கேட்பதாகும்." அவர் கொடுப்பதாக வாக்குரைத்திருக்கிறார். அதனால் இப்போதே, நீங்கள் ஜெபித்து விசுவாசத்தோடு, உங்களை இயேசுவின் கரங்களில் ஒப்புவித்து அவர் நித்திய ஜீவனை உங்களுக்கு தருவார் என்று நம்புவீர்களா?

நீங்கள் ஜெபித்திடுங்கள் , :தேவனே, நான் பாவி என்று தெரியும். என்னுடைய பாவங்கள் நித்தியமாய் என்னை உம்மிடமிருந்து பிரிக்கிறது என்பதை அறிவேன். என்னுடைய சார்பில் இயேசு சிலுவையில் மரித்தார் என்று அறிவேன். அவருடைய மரணத்தையும் என் பாவத்தின் விலைகிரையத்தையும் ஏற்றுகொள்கிறேன். அவர் என் இரட்சகராக ஏற்றுகொள்கிறேன். என்னை இரட்சித்ததற்காக நன்றி, இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறேன். ஆமென்"

இந்த ஜெபத்தை நீங்கள் செய்திருந்தால், வேதம் சொல்கிறது, கர்த்தருடைய நாமத்தை தொழுதுகொள்ளுகிற எந்த நபரும் இரட்சிக்கப்படுவான்." உங்களில் சிலர் ஒருவேளை யோசிக்கலாம், "இப்ப என்னால இப்படி செய்ய முடியாது." ஒருவேளை கிறிஸ்துவை ஏற்றுகொள்வதில் தாமதம் செய்வீர்களானால், Dr. ஹேபர்மஸ் உங்களுக்கு சில வார்த்தைகளை சொல்ல விரும்புகிறார். கேளுங்கள்.

**Dr. கேரி ஹேபர்மாஸ்** ஒருவேளை, என்ன நடக்குதுன்னு யோசித்து அமர்ந்துகொண்டிருக்கிறீர்களா, பாருங்க, உங்களுக்கு தெரியாது. நா ஒரு இந்து. நா ஒரு புத்திஸ்ட், நா மதவாதி, நான் நாத்திகன்." இருக்கட்டும், நீங்க இயேசுவை விசுவாசிக்காம விலகி போக காரணங்கள் இருக்கலாம், ஆனா உங்களுக்கு ஒன்னு தெரியுமா? இதற்கு எந்த ஆதாரமும் இல்லை என்ற காரணத்தை சொல்லி நீங்க விலகி போக முடியாது. அந்த ஆறு உன்மைகள் கொண்ட பட்டியலை கூட இன்னும் சுருக்கிட முடியுமான்னு நினைக்கிறேன் ஏன்னா அந்த அளவுக்கு ஒவ்வொன்றும் தனித்தனியாக விளக்கம் கொடுப்பதாக இருக்கிறது.

இதெல்லாம் எங்க போகுதுன்னு உங்களுக்கு தெரியுமா? பவுல் சொல்கிறார் உயிர்த்தெழுதலினால் மரணத்திற்கு நம் மீது அதிகாரம் இல்லை அதன் கூர் முறிந்தது. உயிர்த்தெழுதலினால் தான் பாதாளத்தின் ஜெயம் விழுங்கப்பட்டது என்கிறார். இயேசு கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலினால் தான் நமக்கு நித்திய ஜீவன் சாத்தியமாயிற்று. நீங்க

என்ன செய்யவேண்டும் என்று, பவுல் கூறுகிறார், இயேசுவுக்கு சரின்னு சொல்லுங்கள். இந்த தீர்மானத்தை நாம் எடுக்கிறோமா இல்லையா என்பதை பொறுத்து இருக்கிறது. அதாவது, ஒருத்தர் உங்களுக்கு பொருத்தமாக இருப்பார் என்று நீங்க நினைக்கலாம். ஆனா இது பொருந்தும் என்று நீங்க சொல்லாதவரை உங்களுக்கு திருமணம் நடக்காது. இயேசுவிடம் சரி என்று நீங்கள் சொல்லாவிட்டால், உங்களுக்கு என்ன கிடைக்கும்? அவருடைய போதனைகளை இன்னும் ஏற்றுகொள்ளாமல் இருப்பீர்கள். “மரணமே, உன் கூர் எங்கே? பாதாளமே, உன்னுடைய ஜெயம் எங்கே?

***

எங்களுடைய தொலைக்காட்சி நிகழ்சிகளை காண

இலவச ஜான் அன்கெர்பெர்க் நிகழ்ச்சி ஆப்பை பதிவிறக்கம் செய்திடுங்கள்.

இயேசு கிறிஸ்துவை ஏற்றுகொள்வதற்கான ஜெபம் @JAshow.org

@2015 A.T.R.I.